அதனாலேதான் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது குறிப்பிட்டுப் பெயரை சொல்லச் சொன்னார்கள். ஆனால் குறிப்பிட்டு நான் பலரைச் சொல்ல வேண்டி வரும். ஆனாலும் ஒன்றே ஒன்றை மனதிலே குறித்து வைத்துக்கொண்டால் போதும். வளர்கிற பிள்ளைகள் இருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதை மனதில் வைத்துக் கொண்டும், என்னைப் போன்றவர்கள் வேதனையோடு சொல்வதை மனதிலே வைத்துக்கொண்டும் இனிமேல் இப்படிப்பட்ட சொற்றொடர்களை பயன்படுத்தாமல் இருந்தால் அதுவே போதும் என்பது இந்திய தேசிய காங்கிரஸ் அவர்களுக்கு சொல்லுகின்ற நல்ல நன்றியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிக்க உறுப்பினர் பெருமக்களே, உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய இந்த வேதனையான வினாவும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்த ஆறுதலான விடையும் மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன. எந்தக் காரணம் கொண்டும் இந்த அவையில் ஒரு கருத்துக்கு இன்னொரு கருத்து என்று வளருமானால்கூட தவறான சொற்களை, அவதூறான சொற்களை, பண்பாட்டுக்கும் நாகரீகத்திற்கும் குறைவான சொற்களைப் பயன்படுத்துவதை ஒவ்வோர் உறுப்பினரும் கட்டாயம் கைவிட்டே ஆக வேண்டும். மீண்டும் அதுபோன்ற தொடர்களை அவர்கள் பயன்படுத்துவார்களானால், சுட்டப்படுவார்களானால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல, இந்த அவையிலேயே அவர்கள் மன்னிப்பும் வருத்தமும் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்பதையும் மனதில் கொண்டு அனைவரும் மிகுந்த பண்பாட்டுடன் நடந்து கொண்டு, நம்முடைய எதிர்கால சந்ததியினர்களுக்கு விட்டுச் செல்வது நல்ல மரபே தவிர இதுபோன்ற தவறான உதாரணங்களாக இருக்கக்கூடாது என்பதை மனதில்கொண்டு இந்தப் பிரச்சினையை இத்தோடு முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று தெரிவித்து அனைவருடைய ஒத்துழைப்பையும் நாடி என்னுடைய அடுத்த அலுவலுக்குப் போகிறேன்.

7. அறிவிப்பு.

1989–90ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து ஆளுநரின் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989–90 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 203, Clause (3), of the Constitution of India, I, P. C. Alexander, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1989-90."